Registered as a Newspaper

எழிலுறு காட்சிகளுடன் அழகுற படம் பிடித்திட...
அஜந்தா
கலைப் பூங்கா
63, சங்கிலியன் வீதி, நல்லூர்

உதயன்

விலை ரூபா 5-00

எழிலுறு காட்சிகளுடன் அழகுற படம் பிடித்திட....
அஜந்தா
கலைப் பூங்கா
63, சங்கிலியன் வீதி, நல்லூர்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 06 செவ்வாய்க்கிழமை (20 06 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 205

# அரசாங்கத்தை ராஜினாமாச் செய்யக் கோரி

# ஐ.தே.கட்சி எதிர்ப்புப் போராட்டம் நடத்தும்

## அரசை ஆட்டம் காணச்செய்யும் பிரசார இயக்கத்துக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 20

பொது மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் காலத்தில் வழங்கிய இரண்டு பிரதான வாக்குறுதிகளான —

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு —

ஆகியனவற்றை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் இதுவரை உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்காததைச் சுட்டிக் காட்டி —

அரசாங்கத்தை ராஜினாமாச் செய்யுமாறு கோரும் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்துவதற்கு — ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்து வருகிறது.

சந்திரிகா தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து பத்து மாதங்களாகின்றன

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது, 1995 ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விதத்தில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவது ஆகியன பொ. ம. ஐக்கிய முன்னணியின் பிரதான வாக்குறுதிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மற்றொரு படை முகாம் மூடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 20

மட்டக்களப்பில் மற்றொரு படைமுகாம் மூடப்பட்டுள்ளது.

கழாவடி என்னும் இடத்தில் அமைந்திருந்த முகாமே மூடப்பட்டு அங்கிருந்து படையினர் வெளியேறியுள்ளனர்.

அண்மையில் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட தரவைக்குளம் முகாமுக்கான பிரதான விநியோக வேலைகள் இந்த முகாமின் ஊடாகவே செய்யப்பட்டு வந்தன.

தரவைக்குளம் முகாம் முற்றாக கைவிடப்பட்ட பின்னர் அங்கிருந்த படையினர் கழாவடி முகாமிற்குச் சென்று தங்கியிருந்தனர். (ஐ-4)

## கடற்படைக்குத் தெரியாமல் இராணுவத்துக்குக் கப்பல்!

கொழும்பு ஜூன் 20

வடபகுதியில் உள்ள இராணுவத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீலங்கா கடற்படை முழு ஒத்துழைப்பு வழங்காததால் அதிருப்தியுற்ற இராணுவம், தனக்கென மிகப்பெரிய தரையிறங்கு கப்பல் ஒன்றை சிங்கப்பூரிலிருந்து தருவித்திருக்கிறது.

இந்தத் தரையிறங்கு கப்பல் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தது.

விமானப்படை விமானங்களும், ஹெலிகளும் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானதை அடுத்து —

வடக்கில் உள்ள சுமார் 30 ஆயிரம் துருப்புகளுக்கான விநியோகம் துருப்புகளை இடம் மாற்றுதல் போன்ற தேவைகளுக்கு கடற்படையையே இராணுவம், பொலிஸ் விமானப்படை ஆகியன பெரிதும் நம்பியிருக்கின்றன.

ஆனால் இந்த விடயத்தில் கடற்படை போதிய ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும் —

தங்களது படகுகள், கப்பல்களைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே கடற்படை தீவிரமாக உள்ளது என்றும் —

அத்துடன் இத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு கடற்படையிடம் போதிய கப்பல் வசதிகள் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையின் நடவடிக்கையில் விசனமுற்றிருக்கும், இராணுவப் பிரிவு கடற்படைக்குத் தெரியாமலேயே பாரிய தரையிறங்கு கப்பலைக் கொள்வனவு செய்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ]

## வெற்றிலைக்கேணி கடலில் பாரிய கப்பல்கள் தரிப்பு!

தென்மராட்சி, ஜூன் 20

வெற்றிலைக்கேணி முகாமை அண்டிய கடற்பரப்பில் பாரிய கடற்படைக் கப்பல்கள் நேற்று முதல் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரமும் இது போன்ற இரு கப்பல்கள் அங்கு தரித்துச் சென்றன.

படையினருக்கான உணவுப் பொருள்கள், ஆயுதங்கள் என்பன இக் கப்பல்களில் எடுத்து வரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கடலில் தரித்துள்ள கடற்படைக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக விசைப்படகுகள் சில அப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன. [ஐ-117]

## நாட்டைக் காக்க அணிதிரள அழைப்பு!

### தெற்கில் கையெழுத்து இயக்கம்

கொழும்பு, ஜூன் 20

தேசத்தைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதிக்கு முழு ஆதரவை வழங்குமாறு கோரி 10 லட்சம்பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று தெற்கில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

பதவிப் போட்டிகளைக் கைவிட்டு நாட்டைக் காப்பாற்ற அணிதிரளுமாறு கோரும் அந்த மகஜர் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக நேற்றைய ''தினமின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் இந்தியா, சீனா, ஜப்பான், ஈராக், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல நாடுகளின் தலைவர்களுக்கு அந்தந்த நாட்டு தூதர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ 5-6)

## காணாமற்போன மீனவர் நிலை பற்றி தகவல் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 20

மண்டைதீவு முகத்துவாரம் கடற்பகுதியில் கடந்த புதன்கிழமை தொழிலில் ஈடுபட்டிருந்த போது கடற்படையினரின் தாக்குதலின் பின்னர் அவர்களால் பிடித்துச் செல்லப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட பத்து மீனவர்களினதும் நிலை என்னாயிற்று என்பது இன்னும் தெரியவரவில்லை.

காணாமற் போன பத்து மீனவர்களும் படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பதை அறிவதில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினர் யாழ். அரசஅதிபர் ஆகியோரின் உதவி நாடப்பட்டுள்ளது.

எனினும் இவர்கள் குறித்த தகவல் எதுவும் நேற்றுவரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. துறைநீலாவணையில் பொலிஸாரின் சூட்டுக்கு மாணவர்கள் இருவர் பலி!

கொழும்பு, ஜூன் 20

மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணையில் கடந்த வெள்ளியன்று காலை பொலிஸார் நடத்திய தேடுதலின் போது உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கல்முனை இராமகிருஷ்ண மிஷன் கல்லூரியைச் சேர்ந்த இராசநாயகம் சற்குணம், கல்முனை பாத்திமா கல்லூரியைச் சேர்ந்த சாமித்தம்பி நடராஜா ஆகிய இரு மாணவர்களுமே பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகினர்.

அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்க துறைநீலாவணைப் பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் போது நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் அவர்கள் அனைவரும் பெரிய நீலாவணைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தேடுதலின் போது வீடுகளில் இருந்து பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன. (ஐ)

## கொழும்பில் தமிழ் இளைஞர் 25 பேர் கைது

கொழும்பு, ஜூன் 20

கொழும்பு கோட்டைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று காலை படையினர் நடத்திய தேடுதலின் போது 25 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர். (ஐ)

# கொக்குத்தொடுவாய் அதிரடியில் அதிகாரி உட்பட 4 படையினர் பலி!

## சிப்பாயின் சடலமும், ஆயுதங்களும் மீட்பு!!

யாழ்ப்பாணம், ஜூன் 20

மணலாறு மாவட்டம் கொக்குத் தொடுவாயில் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் அதிகாரி உட்பட நான்கு படையினர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர்.

கொக்குத்தொடுவாய் முகாமில் இருந்து வெளியேறி விடுதலைப் புலிகளை பதுங்கியிருந்து தாக்கும் நோக்கில் வந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கி இருந்து இந்த அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

கொக்குத்தொடுவாய் முகாமில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் வைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதல் சுமார் 45 நிமிட நேரம் நீடித்தது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிப்பாய் ஒருவரின் சடலத்தையும் ஆயுத தளபாடங்கள் பலவற்றையும்புலிகள் கைப்பற்றினர். (ஐ-4)

### புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கொக்குத்தொடுவாயில் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ரீ 56 - 2 ரகத் துப்பாக்கி | — 01 |
| ★ நடுத்தர ரவைகள் | — 104 |
| ★ ஏ. கே. மகஸீன் | — 06 |
| ★ குண்டுகள் | — 02 |
| ★ சப்பாத்து | — ஒரு சோடி |
| ★ ஏ. கே. ஜக்கற் மகஸீன் ஹோல்ஸ்ர் | — 01 |
| ★ மழைக் கவசம் | — 01 |
| ★ தண்ணீர் கொள்கலன் | — 02 |
| ★ கொமாண்டோ கயிறு | — 01 |

(ஐ-4)

### போராளிகள் இருவர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 20

கொக்குத் தொடுவாயில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

★ லெப்ரினன்ட் தமிழ்மாறன் (கனகரத்தினம் சிவகுமார் — யாழ்ப்பாணம்)

★ வீரவேங்கை மணிரத்தினம் (பஞ்சாட்சரம் மரியதாஸ் — சாவகச்சேரி) ஆகியோரே வீரச்சாவடைந்தனர். [ஐ-4]

## அரசுக்கு அமெரிக்கா ஆயுத உதவி?

கொழும்பு, ஜூன் 20

இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகளை வழங்குவது குறித்து கிளின்டன் நிர்வாகம் ஆலோசித்து வருவதாக அமெரிக்காவில் வெளியாகும் ''வோல் ஸ்றீட் ஜர்னல்'' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளதாக நேற்றைய ''தினமின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ 5-6)

## தாண்டிக்குளத்தில் மேலும் கெடுபிடிகள்

ஓமந்தை, ஜூன் 20

வவுனியா - தாண்டிக்குளம் ஊடாக வடபகுதி வரும் பிரயாணிகள் மீதான கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன; மோசமடைந்தும் வருகின்றன.

பிரயாணிகள் கொண்டு வரும் பொருள்களை நினைத்த நினைத்த மாதிரி இராணுவத்தினர் தடுத்து நிறுத்துகின்றனர்.

எடுத்து வர அனுமதிக்கப்படும் பாவனைப் பொருள்களின் எண்ணிக்கை, அளவு என்பவற்றையும் இராணுவத்தினர் குறைத்து வருகின்றனர்.

குறிப்பிட்ட பொறுப்பதிகாரி ஒருவரின் மனநிலையையும், போக்கையும் பொறுத்து அனுமதிக்கப்படும் பொருள்களின் தன்மை, அளவு என்பன நாளுக்கு நாள் வேறுபடுகின்றன.

அவர் தனது மனநிலையைப் பொறுத்தும், சில வேளைகளில் பயணிகளைப் பொறுத்தும் அளவுகளைக் குறைக்கிறார்; கூட்டுகிறார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாவை நாடு கடத்த கோரியது சமாதான முயற்சிக்கு பாதகமே!

## தொண்டமான் பேட்டி

கொழும்பு, ஜூன் 20

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைது செய்து நாடு கடத்துமாறு இந்தியா இலங்கை அரசாங்கத்திடம் விடுத்துள்ள கோரிக்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் சமாதான முயற்சிகளுக்கு நிச்சயம் பாதகமான செயல் ஆகும். எனினும் அது சமாதானத்துக்கு முற்றாகவே தடை போட்டு விட்ட செயல் என்று கூற முடியாது

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கால்நடை அபிவிருத்தி கிராமிய தொழிற்துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் முன் [...] தெரிவித்துள்ளார். கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதானால் விடுதலைப் புலிகளுடன் தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். மற்றவர்களுடன் பேசுவதால் எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது என்பது இப்போது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இப்பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகவே இருப்பதால் உடனடியாக இல்லாவிட்டாலும் காலப் போக்கில் [...] ஏற்படலாம்.

★ கேள்வி:- பிரபாகரன்— பற்றிய தங்களின் ஒப்பீடு பெரும் சர்ச்சையைக் கிளப்பியது அது பற்றி...

★ தொண்டா:- என து கருத்தை இந்தியாவில் வைத்தே குறிப்பிட்டேன். மஹாத்மா காந்தியின் அஹிம்சைப் போராட்டத்தை இந்திய மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்

அதற்காக ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட பகத்சிங், சந்திரபோஸ் போன்றோரை இந்திய மக்கள் இன்னமும் மறக்கவில்லை

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க போராடிக் கொண்டிருக்கும் பிரபாகரனையும் இந்தியா அக்கண்ணோட்டத்தில் தான் பார்க்க வேண்டும்.

பிரபாகரன் ஆயிரம் தவறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நெடுமாறன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 20

இலங்கை அரசுக்கு இரண்டு கப்பல்களில் ஆயுதங்களை அனுப்பியதாக இந்திய அரசு மீது திரு.ப. நெடுமாறன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

''இந்து'' பத்திரிகையில் இத் தகவல் வெளியாகி உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நன்கு உக்கிய கோழி எரு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 698/15, சபாபதி வீதி, தலையாழி, வயிரவர் கோயிலடி, யாழ்ப்பாணம். [37145]

**தேவை**

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட துணிப் பதிப்பகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: அந்திவானம் பதிப்பகம், நாவலர் சாலை [ஐந்துசந்தி], யாழ்ப்பாணம். [37120]

**கண்டீர்களா?**

18-6-95 அன்று யாழ். மத்திய கல்லூரிக்கு அருகில் வயிற்றுப்பக்கம் வெள்ளையும் மிகுதிப் பகுதிகள் மண் நிறமுள்ள M. H பெயர் பொறிக்கப்பட்ட எருதைக் காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து தகவல் தரவும். சன்மானம் தரப்படும். முகவரி: செல்வராசா தம்பையா, இல. 3, முன்தெரு, யாழ்ப்பாணம். [37150]

உ

# பாராட்டிபட்டம் வழங்கல்

கொழும்புத்துறை நெடுங்குளம்
அம்பலவாண விநாயகர் ஆலயத்தில்
உற்சவ காலத்தில் தொடர் தெய்வீக வாக்குத்தானம் வழங்கிய



## திரு. கா. கணேசதாசன்

(இளைப்பாறிய அதிபர், கொழும்புத்துறை இ. ம. வி.)
அவர்களுக்கு
நாளை (21 - 06 - 1995) புதன்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு

★ சமூக சோதி ★

எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படும்.

அன்று காலை அபிடேக ஆராதனையும் மதியம் மகேஸ்வர பூசையும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பரிபாலன சபை,
உபயகாரர்கள்.

வாழ்த்துவோர்:

திரு. ஜெ. முத்துக்குமாரசாமி (யாழ். இலங்கை வங்கி),
திரு ஆ. ரேம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்),
திரு சி. ஆ. சோதிலிங்கம் (அதிபர் கொழு. இ. ம. வி.),
திருமதி ப. அன்னலிங்கம் (அதிபர் துரையப்பா ம. வி.),
திருமதி இ. செல்வரத்தினம் (கொழு நெடுங்குளம் வீதி)

[சி-1520]

## தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகள் - 1994

1994ஆம் ஆண்டு உயர் தேசிய வணிகத் தேர்வு (H. N. D C -IV) 4ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் 1995-06-21ஆம் திகதி மு. ப. 8-30இற்கு பரீட்சை எடுப்பதற்கு ஆயத்தமாக மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டுடன் தவறாது சமூகமளிக்கவும்.

க. ஜெயரெட்ணம்,
அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995-06-19.

(சி-1521)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்
திரு. மு. பா. முத்துக்குமாருவின்
அருமைத் தாயார்

### திருமதி பாலகிருஷ்ணன்

அவர்கள்

17 - 06 - 95 அன்று சிவபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஏனைய ஊழியர்கள்,
மாணவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(சி-1522)

# இடம் பெயரும் மக்களின் அவலங்களை சித்திரிக்கும் 'முகங்கள்' வீடியோப்படம்

## வளம் கொழிக்கும் வன்னிக் காட்சிகள் ரம்மியமானவை

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நிதர்சனம் நிறுவனம் தயாரித்து வழங்கும் "முகங்கள்" என்னும் வீடியோ திரைப்படம் குடாநாட்டு திரையரங்குகளில் நாளை புதன்கிழமை திரையிடப்பட உள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து இருப்பிடம் இழந்து - வெளியேறும் மக்கள் சந்திக்கும் அவலங்கள் அவை ஏற்படுத்தும் சமூகத் தாக்கங்களை மையமாகக் கொண்டு இந்த திரைப்படத்தின் கதை நகர்த்தப்படுகிறது.

1992 ஆம் ஆண்டில் பலாலியைச் சூழவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பெரும் படை நடவடிக்கையின் விளைவாய் வலி. வடக்கு, வலி. மேற்குப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குடாநாட்டின் மையப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்தன.

அச் சமயத்தில் தெல்லிப்பளைப் பகுதியில் இருந்து மல்லாகம் பகுதிக்கு தன் மனைவி குழந்தையுடன் இடம் பெயர்ந்த சந்திரன் என்ற இளைஞனே படத்தின் பிரதான பாத்திரமாக சித்திரிக்கப்படுகிறார்.

ஒரு பகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கைகளால் அழிவுகள் அவலங்கள் நிகழ்ந்து கொண்டிருக்க—

அந்த இடத்துக்கு அண்மையில் உள்ள மற்றொரு பகுதியில் மக்கள் எதுவும் அறியாதவர்களாய் அவலங்களை ஆபத்தை உணராதவர்களாய் தாமும் தமது பிரச்சினைகளும் என்று இருந்துவிடும் முரண் நிலையை திரைப்படத்தின் தொடக்கத்தில் வெளிப்படுத்த முனைகிறார் படத்தின் நெறியாளர்.

தெல்லிப்பளைக்கும் மல்லாகத்துக்கும் இடையே தெரியும் பெரிய இடைவெளியை இரண்டு குடும்பங்களை மட்டும் வைத்து தெளிவுபடுத்துகிறது திரைப்படம்.

வீடு வாசலை இழந்து அகப்பட்டதை எடுத்துக் கொண்டு கைக்குழந்தையுடனும், இளம் மனைவியுடனும் இடம்பெயர்ந்து வரும் சந்திரன் என்ற இளைஞன் ஒருபுறம்.

பிள்ளைகள் அனுப்பும் வெளிநாட்டு பணத்தில் மனைவியுடனும், மகனுடனும் பேரப்பிள்ளையுடனும் சேர்ந்து ஆடம்பர வாழ்க்கை நடத்தும் ஓய்வுபெற்ற ஆசிரியர் மறுபுறம்.

ஏதோ பழைய அறிமுகத்தில் மல்லாகத்தில் உள்ள அவரது வீட்டுக்கு வந்து அடைக்கலம் கேட்கும் சந்திரனது குடும்பம் அங்கு சந்திக்கும் இன்னல்களை திரைப்படம் விவரிக்கிறது.

மாளிகை போன்ற அந்த வீட்டின் கொல்லைப்புறத்தில் சிறு கொட்டிலில் சந்திரனும் மனைவியும் அவர்களது கைக்குழந்தையும்.

இடம்பெயர்ந்தவர்களை அந்நியர்களாக— விரும்பத்தகாதவர்களாக— "வக்கில்லாதவர்களாகப்" பார்க்கும் அவல நிலையை சிறு சிறு சம்பவங்கள் மூலம் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

படை நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தொழில் இழந்து அலைக்கழியும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை கண்முன் நிறுத்துகிறார் படத்தின் நெறியாளர் ஞானரதன்.

கரையோரப் பகுதிகளில் இருந்து உள்நோக்கி மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் குடாநாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் குடிசன அடர்த்தி அதிகரித்துள்ளது.

தொழில் இன்மை, வதிவிடப் பிரச்சினை, ஒரே வீட்டில் கூட்டு குடும்ப வாழ்க்கை அதனால் தோன்றும் சமூகச் சீரழிவுகள் என்பன அதிகரித்து வருகின்றன.

குடாநாட்டுக்குள் ஏற்பட்டு வரும் இந்த நிலைமைக்கு போர் மட்டும் காரணம் அல்ல.

குடா நாட்டுக்கு வெளியே வளம் கொழிக்கும் தமிழீழத்தின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று வாழ மக்கள் காட்டும் விருப்பின்மையும்தான்.

"முகங்கள்" என்ற இந்த வீடியோ திரைப்படம் ரசிகனின் மனதில் இதனையே உணர்த்த எத்தனிக்கிறது. அதில் அது வெற்றியும் கண்டுள்ளது.

வளம் கொழிக்கும் வன்னி பெரு நிலப்பரப்பின் எழில்மிகு காட்சிகளை மிகவும் தத்ரூபமாக "கமெராவுக்"குள் கொண்டுவந்து முத்திரை பதித்துள்ளார் படத்தின் ஒளிப்பதிவாளர்.

இத்தனை அழகுகள் இதுவரை எங்கே மறைந்து கிடந்தனவோ என்று பார்ப்போரை பிரமிக்கச் செய்யும் காட்சிகள்...

குடா நாட்டுக்குள் கூனிக் குறுகி வாழ்வதை வெறுக்கும் தன்மானமுள்ள இளைஞனான சந்திரன் கொடிய நோய்க்கு தன் குழந்தையைப் பறிகொடுத்து விட்டு இறுதியில் மனைவியுடன் வன்னி பெரு நிலப்பரப்பை நோக்கிச் செல்கிறான்.

சகல வளங்களும் தேங்கிக் கிடக்கும் வன்னியில் அவனது புது வாழ்வு உதயமாகிறது. இதுவே திரைப்படத்தின் கரு.

—தமிழீழ வீடியோ திரைப்படத் துறையில் சமீபகால சாதனைகளில் "முகங்கள்" மற்றொருமைல்கல் எனலாம்.

பெரும்பாலான காட்சிகள் மிக நுணுக்கமாக படைக்கப்பட்டுள்ளன. எனினும் சில பாத்திரங்களில் 'சினிமாத்தனம்' வெளிப்படுகிறது.

காட்சிகளின் யதார்த்தத்தை மறந்து மடிப்புக் குலையாத உடைகளைப் பேண எத்தனிக்கும் சில பாத்திரங்கள் "வீடியோ திரைப்படங்களின் தனித்துவத்தைப் பாதித்து விடுகின்றன.

எனினும் தமிழீழத்தின் வீடியோ திரைப்படங்கள் தென்னிந்திய சினிமாத்தனத்தின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு வருவது ஆரோக்கியமான வளர்ச்சியாகும்.

மொத்தத்தில் எதிரியின் இன அழிப்பை எதிர்நோக்கியுள்ள நிலையிலும் எமது சமுதாயம் தனக்குத்தானே காட்டிக்கொள்ளும் சில "போலி முகங்களை" முகங்கள் என்ற இந்தத் திரைப்படம் மிகத் தெளிவாக விளக்கி நிற்கிறது. ★

—நல்லூர் தாஸ்—

## காத்தான்குடி ஏறாவூரில் 5 ஆயிரம் ஊர்காவலர்கள்

கொழும்பு ஜூன் 20

கிழக்கில் காத்தான்குடியிலும் ஏறாவூரிலும் முஸ்லிம் கிராம வாசிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன எனவும் 'மக்கள் கமிட்டிகள்' உருவாக்கப்படுகின்றன எனவும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

ராணுவம் உள்ளூர் ஊர்க்காவல் படைப் பிரிவுகளை வேகமாக அமைத்து வருகின்றது எனவும் ஐயாயிரம் ஊர்காவலர்கள் திரட்டப்படுவார்கள் எனவும் இந்த அதிகாரிகள் கூறினார்கள். (ஈ)

## கேள்வி அறிவித்தல்

19 06 95 பத்திரிகையில் பிரசுரித்த கேள்வி அறிவித்தலில் இரண்டாவது வேலையின் வைப்புப் பண விவரம் பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகிறது.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|
| கோப்பாய் வைத்தியசாலை திருத்த வேலை | 250/- | 1,000/- |

எந்திரி. சு. சுந்தரகுமார்,
நிறைவேற்று பொறியியலாளர்,
நிர்மாண திணைக்களம், வடமாகாணம்.

நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
19-06-1995.

(சி-1523)

## 1995/96 காலபோக விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கான விண்ணப்பம்

1995 / 96 காலபோகத்தில் இறக்குமதி செய்ப்படவுள்ள விதை உருளைக்கிழங்கு சென்ற ஆண்டைவிட அரை மடங்காக குறைக்கப்படவுள்ளதால் கிழங்கு பயிரிட உள்ள விவசாயிகள் தமக்கு தேவையான விதை உருளைகிழங்கினை பெற்றுகொள்வதற்கு இலகுவாக அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை தங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள பசுமை வேளாண் சேவை நிலையங்களில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 - 07 - 1995 இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மத்திய வேளாண் நலச்சேவைகள்
விவசாயப் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்,
தமிழீழம்.

குறிப்பு:
உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி தனிப்பட்ட முறையில் வடபகுதிக்கு வெளியில் இருந்து விதை உருளைக்கிழங்கு கொண்டு வரப்பட்டு நடுகை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் விவசாயிகள் மீது தகுந்த [illegible]

## இஸ்ரேலுடன் உறவா?

# அரசிலிருந்து வெளியேற அஷ்ரப் அச்சுறுத்தல்!

கொழும்பு, ஜூன் 20

அரசாங்கம் இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை ஸ்தாபிக்கத் தீர்மானித்தால் நான் அரசாங்கத்தில் தொடர்ந்தும் இருக்க முடியாது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் "சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்.

யுத்த நிலைமையில் இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஸ்தாபிக்க அரச தரப்பினர் விரும்புகிறார்கள்.

1984இல் யுத்த நிலைமையில்தான் ஜே ஆரும் இதைச் செய்தார் அவர் கொழும்பில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை அமைத்தார். வடக்கு - கிழக்கு மோதலைத் தீர்க்கலாம் என்று நம்பினார்.

ஆனால் இஸ்ரேலியர்கள் விஷயத்தை மோசமாக்கினார்கள்.

இஸ்ரேலியர்கள் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிளவு ஒன்றை ஏற்படுத்தி இனப் பிரச்சினையில் புதியதோர் பரிமாணத்தை ஏற்படுத்தினார்கள். இது அவர்களுடைய பெரிய சாதனையாகும்.

இஸ்ரேலியர்கள் ஸ்ரீலங்கா ராணுவத்துக்கும் புலிகளுக்கும் ஒரே காலத்தில் பயிற்சி அளித்தார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

"ஏமாற்று மூலம் — ஒரு மொசாட் அதிகாரியின் உருவாக்கமும் அழிப்பும்" என்ற விக்ரர் ஒஸ்றோவ்ஸ்கியின் நூலில் உள்ள இது சம்பந்தமான கூற்றை இரண்டு தரப்பினரும் மறுக்கவில்லை.

இவ்வாறு அமைச்சர் அஷ்ரப் தமது பேட்டியில் மேலும் கூறினார். (ஈ)

## காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணை

### வடக்கு-கிழக்கில் நடக்காது

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடக்கு - கிழக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணை அமர்வுகளை வடக்கு — கிழக்கில் நடத்துவதில்லை என்று காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கில் நிலவும் யுத்த நிலை காரணமாக அங்கு அமர்வுகளை நடத்த முடியாதுள்ளதாகவும்—

வடக்கு - கிழக்கில் இருந்து விண்ணப்பம் அனுப்பியவர்கள் கொழும்பில் உள்ள ஆணைக்குழு அலுவலகத்துடன் [அறை இல. 4, நீதி அமைச்சு, நீதிமன்றக் கட்டடத் தொகுதி] தொடர்பு கொள்ளுமாறும் — ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். சி. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

முதலாம் கட்ட அமர்வு மே மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி அதே மாதம் 31 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இரண்டாம் கட்ட அமர்வே தற்போது கொழும்பில் ஆரம்பமாகியுள்ளது. (ஒ-3)

## ஆலயங்களில்

வண்ணை ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத செந்தில் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கும்பாபிஷேக பிரதிதின நவோத்திர சஹஸ்ர சங்காபிஷேகம் இன்று காலை 8 மணி முதல் நடைபெறும். மாலை மணவாளத் திருக்கோலமும் நடைபெறவுள்ளது. (இ-5)

★ ★ ★

தென்மராட்சி, ஜூன் 20

சாவகச்சேரி கச்சாய் வீதி ஞான வீரபத்திரர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து தொடர்ந்த பத்துத் தினங்கள் நடைபெறும். (ஐ-117)

## அனர்த்தம் குறித்து கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கான பயிற்சிக் கருத்தரங்குகள், இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தால், குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

கிழமை நாட்களில் பிற்பகலிலும், வாரஇறுதி நாட்களில் முழுநாளும் இப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

இது தொடர்பான கருத்தரங்குகளை தமது பகுதிகளிலும் நடத்த விரும்பும் கிராம முன்னேற்ற நிலையங்களைதம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கைசெஞ்சிலுவைச் சங்க செயலர் அறிவித்துள்ளார். (ஒ-5)

உ

## அன்புடன் ஓர் அறிவித்தல்

பேரன்புடையீர்!

— வணக்கம்.

— ஏற்கனவே பல இடங்களிலும் அறிவித்தபடி என் மன ஒருமைப்பாடு காரணமாக சில காலம் சொற்பொழிவுத் துறையிலிருந்து ஓய்வு பெறுவதாய் முடிவு செய்துள்ளேன்.

— கம்பன் விழாக்கள் தவிர்ந்த ஏனைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லையென உறுதியாய் முடிவு செய்துள்ளதால் ஏற்கனவே நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்தவர்களை அந் நிகழ்ச்சிகள் ரத்தானதாகக் கொண்டு, வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

அன்பன்
இ. ஜெயராஜ்
அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்
(சி/1527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## விடுதலையும் உணவும்

இந்த ஆண்டுக்கு — 1995 ஆம் வருடத்தின் 12 மாதங்களுக்கு — யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களில் இதுவரை 25.2 சதவீதமானவை மட்டுமே கப்பல்கள் மூலம் வந்து சேர்ந்துள்ளதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் என்பன கப்பல்கள் மூலம் இதுவரை எந்தெந்த அளவில் வந்து சேர்ந்துள்ளன என்ற புள்ளிவிவர உத்தேச மதிப்பீட்டினை நேற்றைய உதயனில் வெளியிட்டிருந்தோம்.

பன்னிரண்டு மாதங்களில் ஆறு மாதங்கள் அனேகமாகக் கரைந்து போய்விட்டன. இன்னும் ஆறு மாதங்களே மீதம் உள்ளன.

ஒக்ரோபரில் மழை காலம் தொடங்கி விடும், அதன் பின்னர் ஜனவரி நடுப்பகுதி வரை கடற்கொந்தளிப்பும் நீடிக்கும். ஆகையால் செப்ரம்பர் மாதம் வரையிலும் மிகுதி 75 சத வீதமான அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் கப்பல் மூலம் இங்கு கொண்டு வந்து சேர்க்க முடியாது!

கடந்த 6 மாதங்களில் முதல் மூன்றரை மாதங்களும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்பதனைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறிருந்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான மிக அத்தியாவசியமான உணவுப் பொருள்களில் கால்பங்கே வந்து சேர்ந்துள்ளன.

இனிமேல் வரும் மாதங்களில் போர் தீவிரமடையும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. எனவே கப்பல்கள் மூலம் தருவிக்கப்படும் பொருள்கள் மொத்தத் தேவையில் பத்து வீதமாவது வந்து சேரும், தேறும் என்பது அசாத்தியம்.

பொருளாதாரத் தடை, முன்னரைப் போல முழு அளவில் நடைமுறையில் உள்ளதால் அத்தியாவசிய உணவு மற்றும் பாவனைப் பொருள்களை தரை வழியாக ஒரு சதவீதத்தையேனும் கொண்டு வர முடியாது.

முழு அளவிலான பொருளாதாரத் தடையை அறிவித்த இரண்டொரு நாள்களில் —

தடை செய்யப்படாத பொருள்களைக் கூட இராணுவம் தடுத்தால் தாம் அது குறித்து எதுவும் செய்ய முடியாது என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியிருந்தார். அதனால் தாண்டிக்குளம் ஊடாகப் பயணிகள்கூடச் சொற்ப பொருள்களையும் எடுத்துவர முடியாதுள்ளது.

இவை எல்லாவற்றினதும் மொத்த வடிவம் வடபகுதித் தமிழர்களைப் பட்டினி போட்டு, அவர்களின் போராட்டத்தைப் பலவீனப் படுத்துவதே ஆகும். தமிழர்களை வேற்று நாட்டு மக்களாகக் கருதி பட்டினி போட்டு போரை வெல்லப் பார்க்கிறார் சந்திரிகா!

எனவே தமிழர்கள் வேறு நாட்டை — தனி நாட்டை — சேர்ந்தவர்களே என்ற எண்ணத்தை உறுதியாக்கிக் கொண்டு, உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடவேண்டும். எமது சொந்த மண்ணின் பயிர்களான குரக்கன், எள்ளு, வரகு ஆகியவற்றையும், மற்றும் உள்ளூர் கிழங்கு வகைகளையும் நிறையப் பயிரிட இப்போதே ஆரம்பிக்க வேண்டும். உணவுத் தேவையை எமது சொந்தக் கையாலேயே நிறைவு செய்தால் எமக்கு விடுதலை நிச்சயம் என்பதனை மனதில் நிலை நிறுத்திச் செயற்படுவோமாக.

இது போர்க்காலம் என்பதனை உணர்ந்து உணவு உற்பத்தியின் வேகத்தை அந்த அளவுக்கு விரைவு படுத்துவோமாக. பயிரிடக் கூடிய ஒவ்வொரு அங்குல நிலத்தையும், ஒவ்வொரு மில்லி லீற்றர் நீரையும் பொன்னே போலப் பயன் படுத்த வேண்டும்.

எங்கள் கைகளின் உழைப்பே எமக்கு விடுதலையைத் தரும். எமது சொந்தக் காலில் நின்றாலே நாடும் எமக்குச் சொந்தமாகும்.

# உங்கள் நாட்டில் புலிகளுக்கு தடையில்லை; எமது நாட்டில் எப்படித் தடை செய்வது?

## கொழும்பு வந்துள்ள ஜேர்மன் நாட்டு எம். பி. கேட்டார் இப்படி!

கொழும்பு, ஜூன் 20

''விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏன் எமது நாடு தடைசெய்யவில்லை என்று கேட்கிறார்கள், உங்களுடைய நாட்டிலேயே விடுதலைப் புலிகளை தடைசெய்யாத போது எமது நாட்டில் இது எப்படி சாத்தியமாகும்?''

கொழும்பு வந்துள்ள ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் தூதுக்குழுவில் அங்கம் வகிக்கும் வில்லி விம்மர்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கேட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உங்கள் நாட்டிலே தடை செய்யப்படாத போது விடுதலைப்புலிகளை எப்படி நாம் தடைசெய்ய முடியும்?

அதேசமயம் இலங்கையில் விடுதலைப்புலிகளை தடைசெய்த உடனேயே நாமும் தடைசெய்து விடுவோம் என்று கூற முடியாது: அதன் பின்னர்தான் நாம் இது பற்றி பரிசீலிக்க முடியும்.

தரைக் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளனவா என்று சோதனை செய்ய பெண்கள் மற்றும் சிறுவர்களை இலங்கை இராணுவம் பயன்படுத்துவதாக முறையிடப்பட்டுள்ளது.

இத்தகைய செயல்கள் இந்திய இராணுவம், இலங்கையில் இருந்தபோதும் நடைபெற்றதாக அறிய முடிகிறது இவை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயங்கள்.

எமது நாடு இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை வழங்கப் போவதாக இலங்கை பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளன; இதில் எதுவித உண்மையும் இல்லை.

நேட்டோ நாடுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளைத் தவிர வேறு எந்த நாடுகளோடும் நமது நாடு இராணுவ ஒத்துழைப்பில் ஈடுபட்டதாக சரித்திரமே இல்லை.

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படா விட்டால், இலங்கையை உலக நாடுகள் மறக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

ஒப்பந்தங்களை இயற்றுவது மட்டுமன்றி அவற்றை அமுலாக்கவும் வேண்டும். தற்போது இனப்பிரச்சினையைத் தீர்க்க நல்ல ஒரு சந்தர்ப்பம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினையை தீர்க்க அரசியல் தீர்வில் அரசு ஈடுபாடு கொண்டுள்ளதாலும்—மனித உரிமைகள் முன்னரை விட முக்கியத்துவம் பெற்றுள்ளதாலும்—இனிமேல் இலங்கை மக்கள் ஜேர்மனியில் புகலிடம் தேட அவசியம் இருக்காது என நம்புகிறோம்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-5)

அதிகாரப்பரவலாக்கல் திட்டம் எதுவும் இல்லை

## தீர்வு குறித்து அரசு அக்கறையின்றி செயற்படுவதாக ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 20

விரிவான அதிகாரப் பரவலாக்கல் திட்டம் எதுவுமே அரசிடம் இல்லை; மாறாக மாகாண சபைகளுக்குள்ள காணி தொடர்பான அதிகாரத்தைக்கூட மத்திய அரசே எடுத்துக் கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அக்கறையின்றி அரசு ஏனோ தானோ என செயற்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமாதான முயற்சிகள், பேச்சுவார்த்தை என்பவற்றில் அரசு அக்கறை கொள்ளாததால்தான் எதுவித முன்னேற்றங்களையும் காண முடியவில்லை.

பேச்சுவார்த்தைக்கு உயர்மட்ட அதிகாரிகளின் பங்களிப்பு பெறப்படவில்லை; இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதுவும் முன்வைக்கப்படவுமில்லை.

இவ்வாறான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கக்கூடிய தயார் நிலையில் அரசும் இல்லை இதனால் நாடு படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக சகல கட்சிகளிடமும் கருத்தொற்றுமை காணும் அரசின் முயற்சிக்கு எமது ஒத்துழைப்பை வழங்கத் தயார்.

ஆனால் அரசு, கருத்தொருமிப்புக்கான ஒத்துழைப்பைக் கோரும் போது அதில் சிறிது வேடிக்கை தொனிக்கிறது.

ஆரம்பத்தில் இருந்தே எமது ஒத்துழைப்பு தேவையில்லை என்று அரசு கூறி வந்தது; இவ்வாதத்தை தாண்டிவிடுவதாகக் கூறி எம்மை அவமானப்படுத்தவும் அரசு முயற்சிக்கிறது.

இனப்பிரச்சினை தொடர்பான கருத்தொருமிப்பு நாம் தயார்தான்; ஆனால் அதனை பெற்றுக் கொள்ளும் விதத்தில் தான் கருத்து வேறுபாடு இருக்கிறது.

இனப்பிரச்சினையில் மட்டுமன்றி ஏனைய விடயங்களிலும் அரசு தனது வாக்குறுதிகளுக்கு ஏற்ப செயல்படுவதாக கூற முடியவில்லை.

சமாதான முயற்சிகளைத்தான் அரசு திட்டமிட்டுச் செய்யவில்லை என்றால் போரைக் கூட செவ்வனே திட்டமிட்டு வழி நடத்துவதாக தெரியவில்லை.

—இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-5)

பிரபாகரன் விவகாரம்:

## நாடு கடத்தக் கோரும் மனு மேல் நீதிமன்றத்தில் தாக்கலாகும்

கொழும்பு ஜூன் 20

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான், மகளிர் பிரிவுத் தலைவி அகிலா ஆகியோரை இந்தியாவுக்கு நாடு கடத்தக் கோரும் மனுவை, சட்டமா அதிபர் திணைக்களம், அடுத்த 2 வாரங்களுக்குள், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளது

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை விவகாரம் தொடர்பாக, வேறு 22 சந்தேக நபர்களுடன், இவர்கள் மூவரையும் இந்தியா தேடி வருகிறது.

இவர்கள் மூவரையும் தம்மிடம் ஒப்படைக்கக் கோரும் உத்தியோக பூர்வ வேண்டுகோள், கொழும்பிலுள்ள வெளிநாட்டு அமைச்சு ஊடாக அண்மையில் விடுக்கப்பட்டது தெரிந்ததே.

சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வேண்டுகோளையும், நாடு கடத்தல் பற்றிய சட்டநிலைமையையும் ஆராய்ந்தது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இரு தரப்பு நாடு கடத்தல் உடன்படிக்கை ஒன்று இல்லாத போதிலும்—பொது நலவாய நாடு கடத்தல் உடன்படிக்கையின் கீழ், இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவது சாத்தியமானது என்று, சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் நாடு கடத்தல் உத்தரவானது, மேல் நீதிமன்றம் ஒன்றினால் பிறப்பிக்கப்பட வேண்டியது அவசியம்; இது பற்றிய உத்தரவை பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் உயர் நீதி மன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்திய குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் இந்த மூன்று பேரும் கொலை ஒன்று தொடர்பாக முக்கிய சந்தேக நபர்களாக குற்றம் சாட்டப் பட்டுள்ளதை அவர் நிரூபிக்கவும் வேண்டும்.

ஆனால், இந்த உத்தரவை விரைவாக அமுல் செய்வதற்கான சாத்தியங்கள் குறித்து அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளார்கள்.

இதே போன்று அவுஸ்திரேலியாவில், மோசடிக் குற்றச்சாட்டுகளுக்குள்ளான அந்நாட்டு பிரஜை ஒருவரை, இலங்கையில் இருந்து, அங்கு நாடுகடத்துமாறு 1982 ஆம் ஆண்டு கொழும்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சுட்டிக் காட்டப்பட்டது.

இவர் பின்னர் 1992 ஆம் ஆண்டிலேயே நாடு கடத்தப் பட்டார் சுமார் 10 வருடங்களாக அவரை நாடு கடத்துவது பற்றி சிக்கலான வாதப் பிரதி வாதங்கள் இடம்பெற்று வந்தன. (ஒ-5)

## சமஷ்டி முறையால் நாசம் விளையும் என்கிறார்கள் சிங்களப் பிரமுகர்கள்

கொழும்பு, ஜூன், 20

''சமஷ்டி என்பது நாசத்தைத் தேடுவதாகவே முடியும். இனவாதியும் யதார்த்தத்தைப் பாராதவரும்தான் சமஷ்டியை விரும்பமுடியும்.''

சிங்களப் பிரமுகர்கள் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிவானும் முன்னாள் தற்காலிக நீதியரசருமான ஆர். எம். வனசுந்தர, ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிவான் ஓ. எஸ். எம். செனிவிரத்ன, ஓய்வுபெற்ற சொலிஸிட்டர் ஜெனரல் ஈ. டி. விக்ரமநாயக ஆகியோர் உட்பட நீதித்துறை, வைத்தியத்துறை, பொறியியல் துறை, அரச திணைக்களங்கள் முதலியவற்றைச் சேர்ந்த 26 பேர் இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

சமஷ்டி அமைப்பு அமுலாக்கப்பட்டால் இணைந்த வடக்கு - கிழக்கு, மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆயுதப் படை ஆகியன உருவாகும். மாகாண அரசாங்கத்தின் அனுமதியின்றி அரசாங்கம் வடக்கிலோ கிழக்கிலோ ராணுவ, கடற்படை அல்லது விமானப் படை முகாமை அமைக்க முடியாது என்று அறிக்கை கூறுகின்றது.

சமஷ்டி அமைப்பால் நாட்டின் பிறபகுதிகளில் நிலவும் சமாதானம், சௌஜன்யம், சகோதரத்துவம் ஆகியன பாதிக்கப்படும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை ஜூன் 18 ஆம் திகதிய ''சண்டே லீடர்''லும், ''சண்டே ஐலண்டி''லும் ''சண்டேரைம்ஸிலும்'' வெளியிடப் பட்டுள்ளது. (ஒ-க)

## ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு: வாக்குறுதியை அரசு காப்பாற்றுமா?

கொழும்பு, ஜூன் 20

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் திட்டத்தை, ஏற்கனவே வாக்குறுதி அளித்தபடி, ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் செயற்படுத்த முடியாமற் போகலாம் என ''சண்டே ரைம்ஸ்'' வார இதழில் அதன் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற சமயம், இந்த ஆண்டு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக சந்திரிகா குமாரதுங்கா வாக்குறுதி அளித்திருந்தார்.

ஜே.வி.பி. வேட்பாளரான கலப்பதி, இந்த வாக்குறுதியின் பேரில் சந்திரிகாவுக்கு ஆதரவாக தமது வேட்புமனுவையும் வாபஸ் பெற்றிருந்தார்.

தற்போது [illegible] திகதிக்குள் [illegible] எல்லைக்குள் [illegible] முடியாத நிலையில் சந்திரிகா இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) அரசாங்கம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பதாக [illegible] அரசியல் செய்தியாளர் தெரிவிக்கிறார். (இ)

{புலிகளின் குரல் வானொலியில்}

20 - 06 - 1995

செவ்வாய் இரவு

- ★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
- ★ 8-20 — நலந்தானா?
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம். இ இராஜேஸ்வரன் எழுதிய ''உண்மைகள் அழியாது''
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

21 - 06 - 1995

புதன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம் இல. 25
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 20

இலங்கை ஆசிரிய சேவை, புதிய கல்விநிருவாக அமைப்பு முறை சம்பந்தமான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேலணை - புங்குடுதீவு கிளைகளின் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு வேலணை துரைசுவாமி ம. வி.யில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக வேலணை கோட்டத்தின் கல்விப் பணிப்பாளர் எஸ். நடேசபிள்ளை, ஊர்காவற்றுறை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஏ. கனகசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரமுகர்கள் திரு. க. மகாசிவம், திரு. என். கே. தாசிவம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (ஒ)

### சுதந்திரப் பறவைகள்

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையின் ஆனி மாத இதழ் நேற்று வெளியாகியது.

தாயகத்தைக் காக்கும் பணியில் அனைவரும் இணைய வேண்டும் உலகப் பத்திரிகையாளர்களைக் கவரும் விடுதலைப் புலிகள் பெண் போராளிகள், சீதனத் தடைச் சட்டம், பொருளாதாரப் பலத்தைப் பெண்கள் பெற வேண்டும் ஆகிய அம்சங்கள் உட்பட பல விடாயங்கள் இம் மாத இதழில் இடம் பெற்றுள்ளன. (அ)

### திருமண வீட்டில் திருட்டு

திருமண வீட்டில் விடப்பட்ட இரு சைக்கிள்கள் ஒரே நேரத்தில் திருடப்பட்ட சம்பவம் சமீபத்தில் வரணி நாவற்காட்டில் இடம்பெற்றது.

இத் திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரிகாவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-117)

## இடைக்கால நிர்வாகசபை; கூட்டணி அங்கம் வகிக்காது

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென அமைக்கப் படுவதாக உள்ள இடைக்கால நிர்வாக சபையில் தமிழர் விடுதலை கூட்டணி அங்கம் வகிக்காது என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இடைக்கால நிர்வாகசபை அமைப்பது சம்பந்தமாக ஜனாதிபதி தலைமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை கூடும் மாநாட்டில் கூட்டணியும் சமுகமளிக்கும்.

இடைக்கால நிர்வாகசபை அமைப்பதானது, இனப்பிரச்சினை தீர்வை மேலும் காலம் தாழ்த்தும் என்றும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-5]

## அரசியல் தீர்வை அரசு வெளியாக்க வேண்டும்

### முஸ்லிம் காங். செயலாளர் கருத்து

கொழும்பு, ஜூன் 20

அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கத் தீர்வை வெளியாக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றத்தில் குழுக்களின் துணைத் தலைவருமான றாவ் ஹக்கீம் ''சண்டே லீடர்''ருக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்.

அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு இது சரியான தருணம் அல்ல என்ற அமைச்சர் பீரிஸின் கருத்தைத் தான் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறினார்.

வடக்கு—கிழக்கு மாகாணங்களின் இணைப்பு என்ற விஷயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் உள்ளன என்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

யுத்தத்தை நடத்த இஸ்ரேலின் ஆதரவு நாடப்பட்டால் தமது கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறும் எனவும் திரு ஹக்கீம் இப் பேட்டியில் கூறினார். [க]

## சந்திரிகா கூறிய உறுதி நடைமுறைக்கு வரவில்லை

படையினரின் குடும்பங்கள் நல்ல முறையில் கவனிக்கப் படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று வாரங்களுக்கு முன்னர் உறுதி கூறியிருந்த போதிலும், அந்த உறுதி மொழி நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை என ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்தது.

கடந்த செப்டெம்பரில் மூழ்கடிக்கப்பட்ட 'சாகரவர்த்தனா' கப்பலின் தளபதி அஜித் போயா கொட புலிகளின் சிறையில் வாட, அவரது மனைவிக்கு இங்கு கார் வசதி வழங்க அரசு மறந்து விட்டது என்று ஓர் உதாரணத்தையும் அப் பத்திரிகை காட்டியுள்ளது. (உ)

## அனுராவை சேர்ப்பதில் ஸ்ரீமாவோ ஆர்வம்

கொழும்பு, ஜூன் 20

அனுரா பண்டாரநாயக்கா பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் சேருவது, ஏற்கெனவே ஊகிக்கப்பட்டதை விட முன்னதாகவே இடம் பெறலாம் என்று நம்பப்படுகிறது.

அனுரா பண்டாரநாயக்கா தற்போது வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

அவர் வெளிநாடு புறப்பட்ட சமயம் தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீஜெயவர்த்தன புர ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

ஆஸ்பத்திரியில் ஸ்ரீமாவோவின் அறைக்கு சிரேஷ்ட அமைச்சர் ஒருவருடன்சென்ற அனுரா பண்டாரநாயக்கா தாயாருடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்

## நோயாளி வெறும் தரையில் படுக்கும் அவலநிலை!

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நோயாளிகளில் பலர் வெறும் தரையில் படுக்க வேண்டிய நிலை நிலவுகிறது! இவர்கள் படுப்பதற்கு பாய்களும் வழங்கப்படுவதில்லையாம்.

இங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், மேலதிக நோயாளர் தரையில் படுக்க விடப்படுகின்றனர்.

இவர்களுக்கான பாய்கள் வைத்தியசாலையே வழங்க வேண்டும்; ஆனால் அவ்வாறு வழங்கப்படுவதில்லை.

இது பற்றி வைத்தியசாலை அதிகாரிகளிடம் விசாரித்த போது—

யாழ். சுகாதாரத் திணைக்களம், வரையறுக்கப்பட்ட வர்த்தகத் திணைக்களமான பனை அபிவிருத்தி சபையிடமே பாய்களை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும், அவர்களின் பற்றுச் சீட்டிற்கே பணம் வழங்கப் படும் எனவும் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்—

வடமராட்சி பனை அபிவிருத்தி வர்த்தக நிலையமான 'கற்பகத்தில்' பாய்களுக்கு தட்டுப்பாடு இருப்பதால் அவற்றை கொள்வனவு செய்ய முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பாடசாலைகளில்

கொக்குவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலையும், கொக்குவில் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையும் இணைந்து நடத்தும் இலமெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 - 30 மணிக்கு, கொக்குவில் மேற்கு கி. மு. சங்க மைதானத்தில் நடைபெறும். [ந]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பெருமாள்பிள்ளை கருணாநிதி
## செல்வன் கருணாநிதி தினேஸ்
## செல்வி கருணாநிதி அனுஷா

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியில் வசித்தவருமான பெருமாள்பிள்ளை கருணாநிதி, செல்வன் கருணாநிதி தினேஸ், செல்வி கருணாநிதி அனுஷா ஆகியோர் 16-06-95 இல் ஜேர்மனியில் அகால மரணம் ஆனார்கள்.

பெருமாள்பிள்ளை கருணாநிதி காலஞ்சென்ற பெருமாள்பிள்ளை சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் திருமதி க. கனகாம்பிகையின் அன்புக் கணவரும், நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையினார் நாகம்மாவின் அன்பு மருமகனும், திருமதி சிவனுமைச் செல்வி இராசப்பா, பெ. சிறீகாந்தன் (கனடா), பெ. சிறீகிருஷ்ணன் (கனடா), திருமதி சிவகாமி சிவபாதம் [வசாவிளான் மகா. வி. ஆசிரியை], பெ. கிரிதரன் (பின்லாந்து], பெ. பாலகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு இராசப்பா [நில அளவையாளர், கொழும்பு], ஐ. சிவபாதம் [முகாமையாளர், மக்கள் வங்கி], திருமதி சி. இந்திராணி [கனடா], திருமதி சி. ஈஸ்வரி [கனடா], திருமதி இ மாலினி [பின்லாந்து] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரினதும் பிள்ளைகளினதும் நல்லடக்கம் ஜேர்மனியில் 17-06-95 சனிக்கிழமை நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. சிவபாதம்
[மைத்துனர்]

திலீபன் வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

[37155]

## கணபதிப்பிள்ளை சடாசிவம்

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை, புதுறோட்டைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை சடாசிவம் [அப்புச்சி] 19-06-95 திங்களன்று காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், இராசமணி, செல்லம்மா, தம்பிஐயா ஆகியோரின் சகோதரனும், நவரட்ணம், ராஜேஸ்வரி, தணிகாசலம், காலஞ்சென்ற பவளம் ஆகியோரின் தகப்பனும் வில்வமங்களம், யோகராணி ஆகியோரின் மாமனாரும், இறஜினி, பிரபாகரன், கருணாகரன், சதீஸ்கரன், ஜீவாகரன், உஷா, கிருஷா, ஸ்ரீசரன், சுதா, கிருபா, சித்துஜன், டிலோஷா, சோதி ஆகியோரின் பேரனும், சோபிகா, சோபிதாவின் ஆகியோரின் பூட்டனாருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று (20-06-95) செவ்வாய்க்கிழமை பத்து மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெற இருப்பதால் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. பிரபாகரன்
(பேரன்)

புதுறோட்,
ஆறுகால்மடம்.

[37149)

## திருமதி சின்னத்துரை தங்கம்

பொற்பலந்தம்பை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை தங்கம் 19-6-95 திங்கட்கிழமை இறைபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற தம்பு சின்னத்துரையின் அன்பு மனைவியும், திருமதி கணேசமூர்த்தி செல்வலட்சுமி, காலஞ்சென்ற அப்புத்துரை (இலங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்), சிவபாக்கியம், கமலாதேவி, மகேந்திரன், உதயகுமார் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இராசா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும், இதயராஜின் பேர்த்தியுமாவார்.

இன்று செவ்வாய்க்கிழமை (20-6-95) முற்பகல் 11.00 மணியளவில் சுதுமலை அம்மன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள தற்காலிக இல்லத்தில் அன்னாரின் ஈமக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. உதயகுமார்
(மகன்)

சுதுமலை அம்மன் கோவிலடி,
சுதுமலை.

(37156)

## துரைராசா மோகனதாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வாழைச்சேனையில் வசித்தவரும் ச துரைராசாவின் அன்பு மகனும், திருநெல்வேலி காளிகோவிலடியைச் சேர்ந்த மாய சோதியின் அன்புக்கணவரும், பிரசாத், பிரசன்னா ஆகியோரின் அன்புத் தந்தையுமான து. மோகனதாஸ் (பொறியியலாளர், தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை) 18-06-95 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-06-95 அன்று வாழைச்சேனையில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்க்கு அறியத் தருகின்றோம்.

தகவல்;
து. ராமதாஸ்
(யாழ். பல்கலைக்கழகம்)
பொ. குணலேந்திரன
(மைத்துனர்)

(37154)

## தில்லைநாதர் மாணிக்கவாசகர்

(முன்னாள் பிராந்தியக் கல்விப் பணிப்பாளரும், கனடா இந்துக் கலாச்சார மன்றத் தலைவரும்)

தில்லைநாதர் மாணிக்கவாசகர் கனடாவில் காலமானார்.

இவர் ஞானாம்பிகையின் அன்புக்கணவரும், புத்தூரைச் சேர்ந்த திருமதி தம்பி நடராஜா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரோஜினி சத்தியநாதன், Dr சாந்தாநடராஜ் ஸ்ரீகிருஷ்ணநாதன், சுசிலா மாட்டின், பரிமளா, தில்லைநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தினாம்பிகை குமாரசிங்கம், பரமேஸ்வரி சிதம்பரநாதன், நாகநாதன், தங்கம்மா மகேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

சமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

தகவல்:
சி. மகேசன்
(சகலன்)

உடையார் வளவு,
சுன்னாகம்.

(37159)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 06 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# யுத்த நிலைமையால் விலைவாசிகள் உயர்வு

## அமைச்சர் விக்ரமரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 20

பொருள்களின் தற்போதைய விலைவாசி உயர்வு பெரும்பாலும் பாதுகாப்பு நிலைமையினாலேயே ஏற்பட்டுள்ளது என்று உள்ளூர்வெளியூர் வர்த்தக, உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரம ரத்ன ''சண்டே ஒப்சேர்வருக்கு'' அளித்த பேட்டி ஒன்றில் கூறினார்.

இதுஒருதற்காலிகநிலைமை நாட்டில் ஒரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யுத்தத்தின் போது விலைவாசிகள் அதிகரிப்பது இயற்கையானதே என்றும் அவர் கூறினார். [க]

## தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கு

# பரீட்சை எடுக்க வசதியாக சம்பளத்துடன் இருவாரலீவு

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நடைபெறவுள்ள தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி இறுதிப்பரீட்சைக்குத் தம்மை தயார்ப்படுத்த வசதியாக இப்பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய இருவாரகால லீவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளை யாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் ஏற்றுக் கொண்டுள்ளார் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்களை இரட்டைப் பிரதிகளில் அதிபர்கள் ஊடாககோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாகவும்—

லீவு விண்ணப்பங்களை தொலைக்கல்வி ஆசிரியர்கள் அனுப்பிவிட்டு லீவு எடுத்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

# யுத்தத்துக்கு மேலதிக நிதி திரட்டுவது பற்றி விவாதம்

## நாடாளுமன்றில் இன்று நடக்கும்

கொழும்பு, ஜூன் 20

வடக்கு—கிழக்கு யுத்தத்திற்கு மேலதிகமாக நிதி சேகரிப்பது தொடர்பான ஆலோசனைகள் இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதி அரசமைப்பு விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியின் அத்துருகிரிய கிளையை திறந்து வைத்து உரை நிகழ்த்தும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை பாதிக்காத வகையில்

வடக்கு—கிழக்கு யுத்தத்துக்கான நிதியை அரசுபெற்றுக் கொள்ள வேண்டி உள்ளது

இதற்கான விவாதம் நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர்கள் இருவர் தமது ஜூன் மாத சம்பளப் பணத்தை தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு வழங்கியுள்ளனர்.

தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க ஆகியோரே அவர்களாவர். (ஐ-14)

## காணாமற்போன...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிடைக்கவில்லை என்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு வாரமாகியும் இவர்களது நிலை தெரியாமையினால் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தினர் மனப்பதற்றமுற்ற நிலையில் ஏக்கத்துடன் பொழுதைக் கழித்து வருகின்றனர்.

இதேவேளை, கடற்படையினரின் தாக்குதல் நடந்த அதே தினத்தில் இரணைதீவு பாலைதீவு கடற்பகுதியில் கரை வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இன்னொரு குழு மீனவர்களே கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் வந்தடைந்தனர் (அ)

உ
சிவமயம்
சாவகச்சேரி —— கோவிற்குடியிருப்பு
ஞான வீரபத்திரர்
★ தேவஸ்தானம் ★
மஹோற்ஸவ கால தெய்வீக நற்சிந்தனை
20-06-95 முதல் 28 06 95 வரை
தினமும் இரவு 8 மணி — 9 மணி வரை
தொடர் விரிவுரை
● பெரிய புராணம் ●
செஞ்சொற் கொண்டல பிரம்மஸ்ரீ
சபாரத்தின ஈஸ்வரசர்மா
அவர்கள்
[தலைவர், ஸ்ரீ லலிதா அன்பு நிலையம் ஐரோப்பிய நாடுகள்)
20-06-95 — தெய்வச் சேக்கிழார்
21-06-95 — மாது சொன்ன சூள்
22-06-95 — தபோதனர் பசி
23-06-95 — செயற்கரும் செய்கை செய்த தீரன்
24 06-95 — சிறு கோவணம் அன்று
25-06-95 — வென்றவர் தம் திருப்பேரோ வேறொரு பேர்
26-06-95 / 27-06-95 / 28-06-95 | தொடர்ந்து தெய்வீகப் பேருரை நிகழ்த்துபவர்
தமிழருவி த. சிவகுமாரன்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து தெய்வீகப் பேருரைகளைக் கேட்டு எம்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.
— நிர்வாகத்தினர்
(37158)

## சவர்க்காரம் தே. எண்ணெய் வந்தன

தென்மராட்சி, ஜூன் 20

கொழும்பிலிருந்து பெருமளவு ''சன்லைட்'' சவர்க்காரம், தேங்காய் எண்ணெய் என்பன கிளாலியூடாக வந்து சேர்ந்துள்ளன.

பத்து லீற்றர் கொள்ளளவு கொண்ட பரல்களில் தேங்காய் எண்ணெயும், சாக்குகளில் அடைக்கப்பட்டு சவர்க்காரமும் எடுத்து வரப்படுகின்றன. (ஐ 117)

## உடற்பயிற்சி ஆசிரியருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன். 20

யாழ். மாவட்ட உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் கல்வி வலயம் ஒன்றின் முகாமைத்துவக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு. எஸ் டிவகலாலா அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளார்.

சகல நியமனம் பெற்ற உடற்கல்வி ஆசிரியர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அச்சுவேலியில் போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 20

அச்சுவேலியில் கடந்த வெள்ளியன்று படையினருடன் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் கப்டன் இளந்திரைன் (இராசரத்தினம் உதயச்சந்திரன் — யாழ்ப்பாணம்) என்ற போராளி வீரச்சாவடைந்தார். [ஐ-4]

## செயலக கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். செயலகத்தில் இன்று நடைபெறவிருந்த 1995 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டுக்கான மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக மேலதிக அரச அதிபர் அறிந்துள்ளார். (ஐ)

## மிதி வெடியில் சிக்கி காலை இழந்தார் அளவெட்டி பெண்

யாழ்ப்பாணம், ஜூன் 20

விறகு எடுப்பதற்காகச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் மிதிவெடியில் சிக்கி தமது கால் ஒன்றை இழந்து விட்டார்.

அளவெட்டியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகத்தில் வசிக்கும் தியாகராசா தனலஷ்மி '45 வயது', என்ற பெண்ணே இடது காலை — முழங்காலுக்குக் கீழ் — இழந்து விட்டார்.

இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15]

## ஊர்காவல் படைக்கு மேலும் 1000 பேர்

கொழும்பு, ஜூன் 20

ஊர்காவல் படைக்கு மேலும் ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் யுத்த முனைக்குச் செல்லத் தேவையில்லை எனவும், மக்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் மட்டும் ஈடுபட்டால் போதும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பிரபாவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்திருக்கலாம். ஆனால் ஒரு தனி மனிதனாக அவர் அதைச் செய்யவில்லை.

ஒரு இயக்கத்தின் தலைவர் அவர். தனது மக்களுக்காகத் தான் போராட்டம் நடத்துகிறார் என்பது இங்கு முக்கியமான ஒரு விடயம்.

பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்தியா கோரியிருப்பது அரசியல் விளையாட்டு.

அண்மையில் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டபோது அதிருப்தியாளர்கள் பிரதமர் ராவின் அரசு மீது குறை கூற இவ்விடயம் அவர்களுக்கு வசதியாக இருந்தது.

— இவ்வாறு அமைச்சர் தொண்டமான் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கட்டுநாயக்காவில் பாதுகாப்பு:

# விமான நிலையத்துக்கு 100 யார் நடக்க வேண்டும்

கொழும்பு, ஜூன் 20

அண்மையில் கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் குண்டு வெடித்ததைத் தொடர்ந்து, கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி விமான நிலையத்துக்கு பயணிகளை ஏற்றி வரும் சகல வாகனங்களும், பிரதான நுழைவாயிலுக்கு அப்பால் செல்ல முடியாது.

இதன் காரணமாக பிரயாணிகள், விமான நிலையத்தை சென்றடைய சுமார் 100 யார் தூரம் நடக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## புலிகள் தாக்குதல் நடத்தியசமயம்

# துப்பாக்கிகளை கிணற்றில் வீசினாராம் பொலீஸ்காரர்

மட்டக்களப்பு ஜூன். 20

மட்டக்களப்பு செட்டிபாளையம் பொலிஸ் காவல் நிலையம் மீது கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியபோது கடமையிலிருந்த பொலிஸ்காரர் ஒருவர் நிலையத்தின் ஆயுதக் களஞ்சியத்திலிருந்த 50 க்கும்மேற்பட்ட தன்னியக்க துப்பாக்கிகளை கிணற்றுள் தூக்கிவீசியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது அங்கு 30 பொலீஸார் வரையில் கடமையில் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் நடத்திய இந்தத்தாக்குதலில் 5 பொலீஸார் கொல்லப்பட்டனர் என்பதும், அங்கிருந்த ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டிருந்தன என்பதும் தெரிந்தவையே. (ஒ-14)

# கொழும்பு லொட்ஜில் தங்கியிருந்த இருவர் கைது

முஸ்லிம் பெண்ணாக தன்னை இனங்காட்டிக் கொண்டு இருந்த தமிழ்ப் பெண் ஒருவரையும் அவருடன் தங்கியிருந்த ரிசர்வ் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

கொழும்பு ''லொட்ஜ்'' ஒன்றில் கடந்த திங்கட்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அளுத்கம தர்கா நகரைச் சேர்ந்தவராக காட்டிக் கொண்ட இப்பெண் பொத்துவிலைச் சேர்ந்தவர் எனவும் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் காரைதீவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வழங்கிய இவர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு உள்ளதா என பொலீஸார் மேல்விசாரணை செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி கல்விக்கோட்டத்திலுள்ள மூன்று பாடசாலைகளில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைக்க தலா ரூபா ஒரு லட்சம் விதம் ரூபா மூன்று லட்சமும் ஒரு பாடசாலையில் குழாய்க் கிணறு அமைக்க ரூபா 20 ஆயிரமும் இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வரணி, கரம்பைக்குறிச்சி அ. த. க. பாடசாலை, கைதடி நவீல்ட் பாடசாலை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகியவற்றில் புதிய வகுப்பறைக் கட்டடமும், சாவகச் சேகரி இந்துக் கல்லூரியில் குழாய்க்கிணறும் அமைக்கப்படவுள்ளன. (க-117)

## கோஷ்டி மோதலில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற கோஷ்டி மோதலில் மூவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி காயமடைந்தனர்.

வசந்தபுரத்தைச் சேர்ந்த எஸ். கிறிஸ்டின் பெர்ணான்டோ (வயது 38), எஸ். ஜெனிராஜ் (வயது 25), என் சுரேஷ் (வயது 24) ஆகிய மூவருமே காயமடைந்தனர். [ஐ-15]

## இரு தமிழர்கள் கைது

கொழும்பு, ஜூன் 20

வெள்ளவத்தை பகுதியில் வைத்து இரு தமிழர்களை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

புத்தூரைச் சேர்ந்த ராஜா கிருஷ்ணராஜா, கரவெட்டியைச் சேர்ந்த சிங்காரம் புஸ்பமதி ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என்று இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ-5)

## தாண்டிக்குளத்தில்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதனால் நாளாந்தம் மாற்றம் ஏற்படுகிறது.

இதே வேளை கடந்த சனிக்கிழமை தொடக்கம் பயணிகள் கற்பூரம், பற்றி, படிக்கருள் என்பன கொண்டுவருவதற்குமுழுத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் என்பனவற்றின் அளவு மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. [க]

## அரசாங்கத்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளாக இருந்தன.

ஆனால் பத்து மாதங்கள் கடந்தும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அறிகுறி எதுவுமில்லை.

மாறாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண போரைத் தொடங்கியுள்ளது அரசியல் தீர்வுத்திட்ட யோசனை எதனையும் வெளியிடவில்லை

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதிலும் அரசு போதிய அக்கறை காட்டவில்லை. அதனைப் பின்போடுவதிலேயே அக்கறையாக உள்ளது.

புதிய அரசமைப்பை இப்போதைக்குக் கொண்டு வர வேண்டாம் என்ற கருத்தை பௌத்த பிக்குகள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் முன்வைத்த அதனைப் பின்போடும் தனது விருப்பத்தை அடைய நினைக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதனைப் பின்போடுவதை பிரதமர் ஸ்ரீமாவோ எதிர்க்கிறார்.

எனினும் சந்திரிகாவும், ஜி. எல். பீரிஸ் மற்றும் அமைச்சர்கள் சிலரும் புதிய அரசமைப்பு விவகாரத்தைப் பின்போட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவற்றைத் தென்னிலங்கை மக்களுக்கு அம்பலப்படுத்தும் விதத்தில் பெரிய அளவிலான பிரசார இயக்கத்தை நடத்த ஐக்கிய தேசியக்கட்சி ஏற்பாடுகளைச் செய்து வருவதாக ''ராவய'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது

ஜூலை பதினைந்தாம் திகதி கடந்ததும் அரசுக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகளையும் தனது பக்கம் ஈர்த்து, ஓகஸ்ட் மாதத்தில் அரசாங்கத்தைப் பதவி இறக்குவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் திட்டம் உண்டாம்.

அரசாங்கம் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தும் போராட்டத்தை இம்மாத இறுதியிலேயே ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது

தற்போது நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் அரசியல் கட்சிகள் தங்களின் நிலைப்பாட்டை எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் மாற்றிக் கொள்ளக்கூடும் என்றும் —

அத்தகைய நிலை ஏற்பட்டால் அந்தக் கட்சிகளின் உதவியுடன் அரசுக்கு எதிராக பெரிய அளவிலான பிரசார இயக்கம் ஒன்றை நடத்தி அரசை ஆட்டம் காணச்செய்ய ஐ.தே.க. திட்டமிட்டு எதிர்பார்த்துள்ளதாகவும் — ''ராவய'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

[க-ஐ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org